
"பல கணிகள்"!
இதழ் ௨
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா


# “பல கனிகள்”!

## இதழ் ௨

# பொருளடக்கம்

1. அவனுடன்(விட்டல்) அவள் (சக்கு) உரையாடல்----------------௫1
௨. சக்குவின் நிந்தாஸ்துதி------------------------------------------A (101)
௩. மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் - ஓர் சிறிய விளக்கம்---M (11௩)

எல்லாம் நீ!





எம் ஆத்மானந்த குழந்தைகளே! சிவகாலங்களுக்கு முன்பே, **சாந்தசக்கு**வின் கதை!

அவன் அருளால், வெளியான கதை, அனைவரும் அறிவர். படித்தும், அனுபவமும், பெற்று இருக்கின்றீர்கள். சிவநாட்களுக்கு முன், அந்த சக்குவைப் பற்றி, ஓர் அறிவின் நிலையால் எண்ணம் வந்தது.

அவன் ஓர் **பக்தையாக** தாவம் விடவில்லையே! என்ற எண்ணத்துடன், எமதய்யன் திருடன் கண்ணனிடம் உரையாடும் போது இது பற்றி கேட்டோம். அவனும், சிரித்துக் கொண்டே, எம் சக்குவின் **பின்** வரவாறும்! **முன்** சம்பவ சிவமாற்ற வரவாறும்! வெளியிட்டான். அதாவது, நடந்த சம்பவங்களை, **திரையிட்டு** காட்டினான் போலும்? அவன்தை புதுமை! அறிந்து (காணவில்லை) **உணர!** அவன்தை **பேறு!** அதை வரிவடிவில், வரைகிறது எனமட்டும், உணர்ந்தால் போதும். இனி கதையை கண்டு உணர்க.

ஸ்ரீ பாபா.




# அவனுடன் அவள் உரையாடல்.

ஓர் வயோதிக அந்தணர். தாம்பூர் சிப்ளா!
சகிதமாக, அவன் நாமாவை, புகழ்ந்து பாடிய வண்ணம்,
ஓர் தெருவழியாக, மெய் மறந்து பாடிய வண்ணம்,
வந்து கொண்டிருக்கிறார்.

அதே தெருவில், மணல் வீடுகட்டி, சொப்பு பாத்
திரங்கள் (மரப்பாச்சி பொம்மைகள்) வைத்து, ஓர்
ஆறு வயது சிறுமி, விளையாடிக் கொண்டிருக்கிறது.
அந்த மணல் வீட்டையும். அம்மரப்பாச்சி பொம்மை
களையும், வைத்து விளையாடும் அக்குழந்தை, அவ்வீட
டையும், பொம்மைகளையும், உண்மை யென
நம்பி, ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கிறது.
அக்குழந்தையின் நாமா! சகு ஆகும்.

வயோதிக அந்தணர் ஸ்ரீ பகவான் ஆகும்.
தன் நாமாவையே, தாமே பாடிக் கொண்டும், நர்த்தனம்
பண்ணிக் கொண்டும், மெய் மறந்த நிலையில், வந்த
அந்த அந்தணர், ஆகாயத்தை, பார்த்த வண்ணம்
வந்த தன்மையால், கீழே நம் சகு கட்டி யிருந்த,
மணல் வீடு தெரியாமல் மிதித்து விட்டார். அதோடு
அல்லாமல், சொப்பு பாத்திரங்களும், சிதறி ஓடி
விட்டன. எல்லாமே நிலை குலைந்து, போன நிலையில்,
நம் சகுவும் பெரியவரையும், மணல் வீட்டையும்
பார்த்தாள். ஆத்திரம், கரும் கோபமாக, வெடித்தது.




அப்பெரியவரை, சுட்டு எரித்து விடுவதைப் போல், ஓர்பார்வை பார்த்தாள் சக்கு.

அவள்:— ஐயா பெரியவரே! என்ன காரியம் செய்து விட்டீர்? என்னுடைய வீடும், பொருள்களும், நாசமாகி விட்டதே. இது தான் பெரியவர்கள், செய்யும் காரியமா?

அவன்:— கொழுந்தே! யாம் ஒன்றும் செய்ய வில்லையே. பொது வீதியில் தானே, நடந்து போய்க் கொண்டிருக்கிறேன்? இவ்வீதி, உனக்கு மட்டும் சொந்தம் இல்லையே? இது எல்லோர்க்கும், சொந்தம் தானே?

அவள்:— வீதி எல்லோர்க்கும், சொந்தம் தான். அது எனக்கும் தெரியும். இவ்வீடு மட்டும், எனக்குச் சொந்தமானதாகும். இதன் பொருள்களும், எனக்குச் சொந்தமானதாகும்.

அவன்:— வீடா? பொருள்களா? அப்படி ஒன்றும் காணேமே, கொழுந்தே. இங்கு மண்ணும், மரம், பொம்மைகளும் தானே கிடக்கிறது? வீடு என எதைச் சொல்கிறாய்? பொருள்கள் என்று, எதை சொல்கிறாய்?






அவள்:— ஓஹோ! என்னிடம் உமக்கு மண்ணை கோருகிறதா? என் அழகிய பொருள்களும், உமக்கு மரப் பொம்மைகளாக தோன்றுகிறதா?

அவன்:— ஏன் கொழுந்தே இத்தனை கோபம்? மண்ணை, மண்ணைத்தான், சொல்லுவோம். மரப் பொம்மைகளை, மரமாகத்தான், சொல்லுவோம். இதற்கு ஏன், இப்படி பிகு பண்ணிக் கொண்டிருக்கிறாய்?

அவள்:— ஓஹோ! நான் பிகுபண்ணிக் கொண்டிருக்கிறேனா? உம் கையில் இருக்கிறதே இவை இரண்டும் தாம்பூரையும்! சிப்ளாவையும் சுட்டிக்காட்டி என்னவாம்?

அவன்:— இது தாம்பூர்! இது சிப்ளா! இதை ஏன் இப்படி கேட்கிறாய்?

அவள்:— இவை இரண்டும் மரக்கட்டை தானே? இவ் இரண்டையுமே, நீ பக்தையும் பொருளையும்! சுட்டிக்காட்டி என்பொருள் என, உரிமை கொண்டாடுகிறீரே? பிறகு நான்



55


அவள்:- ஏன், என் பொருள் என்று உரிமை கொண்டாட கூடாதும். உமக்கு ஓர் வழி! எனக்கு ஓர் வழியா? உம் நிலையால் அது உண்மை என்றால், என் நிலையால் இவை உண்மை தானே?

அவன்:- அவனாகிய ஸ்ரீபகவான், திகைத்து விட்டான். இங்கு ஒன்றும் பேச முடியாமல், திக்கு முக்காடினான். பின் சமாளித்துக் கொண்டு பேசினான் அவன். அம்மா! தொழுந்தே! நீ சின்னவள். --------?

(அவள் இடைமறித்தாள்)

நான் சின்னவள்! அப்படியானால், நீர் பெரியவரா? அப்படியானால், பெருந்தன்மையை காணவில்லையே? ஓர் சின்னக் குழந்தையிடம், இப்படி முரண் பண்ணுகிறீரே? என பணிந்து என் வழிக்கு, வர மாட்டேன் என்கிறீரே?

அவன்:- அம்மா! அம்மா! கொழுந்தே! உன்னிடம் பேசி, என்னால் ஜயிக்க முடியாது தான். என்னை மன்னித்து விடு. யான் என்ன செய்ய வேண்டும்?




அவர் :— அப்படி வாரும் வழிக்கு. என் வீட்டைக் கடந்த காரணம் என்ன?

அவன் :— அம்மா கொஞ்சம் கேள்! யாம் ஸ்ரீ பகவன்! நாம ஸ்மரணையில் ஈடுபட்டிருந்ததால், எம் பார்வை மேல் நோக்கி இருந்தது. ஆகவே கீழே உள்ள பொருட்கள் தோன்றவில்லை. ஆகவே, எம் கால்கள் நந்தனாரின் ஆழ்வந்த தன்மையால் இங்கு உள்ளீடு!

எனச் சொல்லப்பட்டன, சிணுங்கிருக்கலாம் போல் தோன்றுகிறது. அதை எம்மால் அறிய முடியவில்லை.

அவள் :— பொறுங்கள்! பொறுங்கள்! பொறுங்கள்!!

என் ஆழ்ந்து சிந்தித்தாள். அவள் பூர்வ புண்ணியத் திறனும், இச்ஜன்ம கர்மாவின் பரிபாகத்தால் திறனும், இவர் ஏதோ ஓர் பெரிய உண்மையை சொல்கிறார், என்று கருதி தனும், இவ்வாறு கேட்டாள்.



57


அவள்:- குனிவுடனும், பணிவுடனும்! இவ்வாறு கேட்டாள்:)- ஆமாம் ஐயா! ஸ்ரீபகவந்நாம ஸ்மரணையுடன், வந்தோம் என்றும், அதைப்பார்வை **கீழே** நோக்கவில்லை என்றும்; **மேல்** நோக்கி இருந்தது என்றும், **உணர்ச்சியற்ற!** நிலையை சொல்கிறீரே! இது எனக்கு சற்று சந்தேகமாகவும், குழப்பமாகவும், இருக்கிறது.

(A) ஸ்ரீபகவந்நாம ஸ்மரணை என்றால் என்ன?

(B) அதுசமயம் பார்வை கீழ் நோக்காமல்! மேல் நோக்கும் காரணம் என்ன?

(C) கீழே மிகு பரும், பொருள் என்ன என, தெரியாமல், உணர்ச்சி கெட்ட நிலை என்ன? உணர்ச்சி கெட்ட நிலையில், நாங்கள் எப்படி இருப்போர்கள்? இதை, சற்று விளக்க வேண்டும் ஐயா! இக்கேள்வியை, கேட்கும் போது அக்குழந்தையின் கண்கள் குளமாயின.

58




அவன்:- பூர்வ கர்மாவை கொடுக்கிறவனென்றும்,
நாம் இன்று வந்த காரியம், முடிகிறதென்றும்.
ஆனந்தம் கொண்டவன், அன்பாய் சொல்கிறான்:

(A) ஸ்ரீபகவந் நாம ஸ்மரணை என்றால் என்ன?

பதில்:- அறிவின் குழந்தாய்! இப்பெரிய உலகையும், சூர்ய சந்திராதிகளையும், மற்றும் அனைத்து கோள்களையும், அனைத்து ஜீவ கோடிகளையும், உன்னையும்! என்னையும்! உண்டாக்கியவன் ஒருவனே! அவன் நாமாவை சர்வ சதா, ஸ்மரிப்பதுவே, ஸ்ரீபகவந் நாம ஸ்மரணையாகும்.

(B) அது சமயம் பார்வை, கீழ் நோக்காமல், மேல் நோக்கும், காரணம் என்ன?


பதில்:- அன்பான குழந்தாய்! இது சற்று சிக்கலானதும், சிரமம் ஆனதுமாகும். இருப்பினும், உனக்கு மட்டும், சற்று சுருக்கமாக கூறுகிறேன். பின் உன் அனுபவ நடையில் நீயே விரிவாக உணர்வாய். கவனம் தேவை.



அவன் :— இவ்வுலக பொருள்களும், அனைத்து ஜீவ
சரீரங்களும், அவன் **கை! கருவியே!**
எல்லாம் அவனுடையதே! எல்லாம் அவன் இயக்கமே!
அவனன்றி அணுவும் அசையாது! என்பது வாக்கியமே!

**பார்வை மேல் நோக்கு!** வேண்டும்
**கருத்து உள்** " " .

(அதாவது) அவன் போட்டிருக்கும், வேஷம் என மேல் நோக்க வேண்டும்
அவன் உள்ளே இருக்கிறான் என்ற **கருத்து**டன்,
உள்ளே நோக்க வேண்டும். இப்படி கருத்துடன் உணர்ந்தால்,
நம்முடைய பொருளும்! நம் இருப்பும்! நம் இயக்கமும்!
இல்லாது ஒழிந்து நாசமாகும். இங்கு வேறு நிலையில்
உணர்ந்தால்
என் பொருள்! என் செயல்! என்பது **கீழ்** நோக்குதல்.
அவன் பொருள்! அவன் செயல்! " **மேல்** "




மேல் நோக்கும் நிலையில், நாமே அறிவாவோம்.
இந்நிலையில் **நஷ்டம் லாபம்!**
நமக்கில்லை. அது ஸ்ரீபகவானுடையதே. இந்நிலையில்,
தான் உன் வீடும்! உன் பொருள்களும்! கலைக்கப்பட்டன.

இதைக்கவனி! இங்கு எந்தக் குழந்தைகள், எப்படி எப்படி
வெல்வாரோ, உன் போன்று, விளையாட்டுக்கான செய்
திருக்கின். அங்கெல்லாம், இக் **கால்கள்**
செல்லவில்லை. அவை கலையவில்லை. (அப்பாக்கியம் பெறவில்லை)


உ நீயே மதிப்பிடும், பொருள்கள், என்ன என தெரியாமல்
உணர்ச்சி கெட்ட நிலை என்ன? உணர்ச்சி கெட்ட நிலையில்,
தாங்கள் எப்படி இருப்பீர்கள்?

பதில்:— **சாந்தமான** குழந்தாய் **சக்கு!**

ஒருவனே அமைதியுமாய்! அமைதுளியுமாய்! அமைதி
இயக்கமாக இருக்கின்றான் என, சொன்னேன் அல்லவா?
அவன் **நாமஸ்மரணை**யில், ஒருவன் மூழ்கிவிட்டால்
வெளியில் எது நடந்தாலும், தெரியாது! தெரிய
இயலாது. அவனே இவன்! இன்றா விடுதால்



இவளுக்கென நீ உரிமையோ உடைமையோ இருப்போ!
இயக்கமோ! இருக்கமுடியாது! இருக்க இயலாது!
அப்படி இயக்கமோ! இருப்போ! உண்டென தோன்றினால்,
பார்வை மேலே மட்டும்! ~~வெளித் தை நோக்குகிறது~~ என்றும்,
பார்வை உள்நோக்கி செலுத்திடில் என்றும்,
பொருள்படும்.
இப்போது நீ சிறுகுழந்தையாக இருப்பதால், இவை
தெரிந்து உணர்வது சற்று சிரமம்தான்.
அவன் நாமாவில், மூழ்கிவிட்டால், உடல் உலகம் தெரியாது.
உடல் உலக இன்ப துன்பமும் தோன்றினால் அவன் நாமா, உன்
உள்ளே செல்வதில்லை. வெளியே தான் இருக்கிறது,
என உணர்வாயாக.
ஆகவே, அவன் நாம ஸ்மரணையில், பஜனை பாடி
வரும் நிலையில், கீழே இருக்கும், நாமரூப பொருள்!
தோன்றவில்லையே அம்மா! யாம் என் செய்வோம்?
என கண்களில், கண்ணீர் பனித்து நிற்க மகவும்
கனிவாக கேட்கிறேன் எம் தாயும். (தவமுடன் கேட்கிறேன்)




அவன் கண்களில், கண்ணீரை கண்டதும்,
ஐயா! இது என்ன சிறுபிள்ளையாட்டம் கண்ணே?
எனதன் பிஞ்சு கைகளால், அவன் கையைபற்றி,
இழுத்து, குனியச் செய்து, தம் பாவாடையால்!
அக்கண்ணீரைத் துடைத்தாள், அக்குழந்தை சக்கு.
அவள் :— ஸ்ரீபகவன் நாமா! என சொல்கிறீர்களே?

## அது எந்நாமா? அது யார்நாமா?

அதனில் என்ன பிரயோஜனம்? அதை யார்யார்?
ஜபிக்கிறார்கள்? அதையும் சற்று விளக்கிச்
சொல்லுங்கள் பார்ப்போம்?

அவன் :— கொழந்தே! நாம் இந்த, மனித ஜன்மா
எடுத்திருக்கிறோம். என்றாவது ஒருநாள் மரணம்
நிச்சயம். அப்படி மரணம் அடைந்த நாம், திரும்
பவும், ஜனனம் எடுக்க வேண்டும். அதுவும் எந்த
ஜன்மாவோ? நமக்கு தெரியாது. இப்படி பிறவித் தொல்லை
யில், மாட்டாமல், இருப்பதற்கு, ஸ்ரீபகவான்!
நாமாவை ஜபித்து வந்தால், **சாயுஜ்ய** பதவி
(ஸ்ரீபகவானுடனே இருக்கும் பதவிக்கு) நமக்கு கிடைக்கும்.
அநேக ஸ்ரீமஹான்கள் அப்பதவியை பெற்று,



பேரானந்தம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே அந்த நாமம் மஹா மஹா பவித்ரமானது. அதை ஜபித்த, நாரதர்! பிரகலாதன்! துருவன்! ஒர் கஜராஜன்! மேலும் அனேகர், அந்த சாயுச்ய பதவி! அடைந்திருக்கிறார்கள். நீயும் அதைப் பெறலாம்.


அவள்:- அப்படி மஹிமை பொருந்திய நாமமா அது? அதை அடியாளுக்கும், சொல்லி அருளுங்கள் ஐயா! நானும் ஜபிக்கிறேன். என கண்ணீர் பெருக, உருகி கேட்டது அக்குழந்தை?

அவன்:- அக்குழந்தையை தன் மடி மீது இருத்திக் கொண்டு, அவள் காதில் தம் பவள வாயை வைத்து, மிகுந்த ரகஸ்யமாக, சொன்னான் எம்பிரான்.

அவன் சொன்னது:- **ஓம் நமோ நாராயணாய:** என்றான்.


அக்குழந்தை உடனே துள்ளி எழுந்து விட்டது என்ன பெரியவரே! ஏதோ பெரிய ரகஸ்ய நாமா என சொன்னீர்கள். **அது இதுதானா?**

என்பக்கத்து வீட்டு, பையனுக்கும் இதே பெயர்தான். எங்க மாமாவின் பெயரும் இதே பெயர்தான். இப்பேர் உள்ளவர்கள், இத் தெருவில், அனேகர் இருக்கின்றனர். இதைப் போய், ரகஸ்யம் என்றீர்களே?




அவன்:— குறுமுறுவலாக சிரித்தான். குழந்தாய்! நீ
சின்னஞ் சிறியவள்! விபரம் அறியா பருவம்! உனக்கு
இதன் ரகஸியமர்மம்! தெரிய முடியாது தான். பரவாயில்லை.
உன் இதயத்தில் **ஏக்கம்! உருக்கம்!** இருக்கிறது.
எம் வாக்கில் **ஸத்யம்** இருக்கிறது.
**அதை! அதி!** பார்த்துக் கொள்ளும்.
உனக்காகவே **யாம்!** வந்தோம். யாம் வந்த
காரியம் முடிந்து விட்டது. எமக்கு விடை கொடும்
பாயாக. என்று கூறிக் கொண்டே தம் அபய
கரத்தை! அவன் **ஸிரஸில்** வைத்தான் எம்பிரான்.

அவள்:— ஐயா! என்றும்; பெரியவரே! என்றும்,
கூறிய வார்த்தை மாறியது அக்குழந்தைக்கு
ஸ்வாமி! இது என்ன விளையாட்டு? வந்து போகத்
தான் வந்தீரா? இதற்கு வராமலேயே இருந்தி
ருக்கலாமே? இப்படி உம் அபயகரம் வைத்து, அன்
போடு தாக்கிச் சென்ற எம்மை, வார்த்தையும் மாறியது
இப்படி திடீர் என்று.



நட்டாற்றில் விட்டுச் செல்வதுதான் உம்முடைய கருணையின் வாத்ஸல்யமா? இங்கு ஏன் வந்தீர்? எம்மை ஏன் கண்டீர்? எம்மை ஏன் தீண்டினீர்? அந்த மஹாவாக்கியத்தை ஏன் தந்தீர்? யாமும் இப்படி மலத்தில் புழுத்த புழுக்களுடன் புழுவாய் அப்படியே இருந்திருக்கலாமே? என கண்ணீர் கரை புரண்டு ஓட கேட்கிறது அச்சிறுமி!

அவன்: ஆனந்த கூத்தாடினான் ஆகா! ஆகா!! அபூர்வம்! அபூர்வம்!! வந்த காரியமும் பலிதமாக, ஆர்த்தியாகி விட்டது என தமக்குள்ளேயே புலம்பிய வண்ணம் (கொழுந்தே! யாம் வந்து போகக் கூடியவனல்ல யாம் நிரந்தரமானவன்! உன் உள்ளத்தில் பக்தி என்ற விதையை ஊன்றினேம். அது முளைத்து, இரண்டு இலை தெரிந்து விட்டது.




அவ்வாறிருந்தால், நம்பிக்கை! வைராக்கியம்! ஆகும்

அவள்:— மனோ வார்த்தைக்கு ஆகாதன்மையால் ஏன் ஸ்வாமி! ஆட்டமும்! ஆனந்தமும்! மௌனமும்! இணைந்தே தோன்றுகிறதே, அதன் காரண காரியத்தை அடியாள் தெரிந்து கொள்ளலாமா?

அவன்:— வார்த்தையை திசை திருப்பாதே அம்பாய் இவ்வே தொழுந்தே! உன் அன்பு/எம்மை திக்கு முக்காட வைத்து விட்டது அவ்வாறு உதறல். எமக்கு நிறைய, அன்பர்கள் உண்டு. அனைவரும், பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் இப்போது! செல்கிறோம். கூடிய சீக்கிரம் உன்னிடம்! வருவோம்.

அவள்:— ஆமாம் ஸ்வாமி! உங்கள் கைகளில், இரண்டு பொருள், வைத்திருக்கிறீர்களே! அவை எதற்கு? அவை என்ன செய்யும்?

அவன்:— ஆனந்தஜோதியே! ஒன்று தாம்பூர் மற்றொன்று சிப்ளா! என்ற கருவிகளாகும்.




அவள்:— அதன் உபயோகம் என்ன?

அவன்:— நாம் யார்! இசை கூட்டுவதாகும்.
ஆமா! நாம் போவதாகும். ஸ்ரீபகவானின் மீது,
பாடும் பாடலுக்கு, ஒன்று இசையை அமைக்கும்.
ஒன்று அவ்விசைக்கு ஏற்றவாறு நாம் போகும்.

அவள்:— இசையோடும்! தாளத்தோடும்! பாடினால் தான்
ஸ்ரீபகவான் வருவாரா? கரதாளத்திற்கு!
ஸ்ரீபகவான் வரமாட்டாரா?
ராகத்தோடு பாடினால் தான், ஸ்ரீபகவான் வருவாரா?
கரதாளமிட்டு அழுது கூப்பிட்டால், அவர் வரமாட்டாரா?


அவன்:— திகைத்து விட்டான். அவனால் பதில் சொல்ல
இயலவில்லை. அம்மா கொடுத்தே. உன் கேள்விக்கு,
பதில் சொல்லும், நிலையில் யாமில்லை. இதற்கு
யாம் பதில் சொல்வதாக இருந்தால்?



கண்ணீர் பெருகும் கண்களுடனும்! கலங்கி ஏங்கி உருகும் உள்ளத்துடனும்! இருக்கும், எந்த உள்ளமும் ஸ்ரீபகவானை தேடி ஓட வேண்டியதில்லை. அப்படிப்பட்ட உள்ளத்தை! அவன் தேடி ஓடி வருவான். அங்கே ஆகவேண்டும்.

அவள்:— அது போதும். ஹே ப்ரபோ! ஹே குருநாதா! ஏதோ பக்தர்கள் கூட்டம், வருகிறது என்றும். அவர்களுடன், போக வேண்டும் என்றும், சொல்கிறீர்களே? யாம் உம் மகளை இல்லையா? இந்த மகளையும், உடன் அழைத்து செல்லமாட்டீரா? யாம் அதற்கு, தகுதி இல்லாதவளா? ஏன் இந்த பாரபட்சம்?


அவன்:— அப்படி சொல்லாதே எம் கண்மணியே! எல்லா தகுதியும்! உனக்கு இருக்கிறது. இப்போதுதானே, ஸ்ரீபகவான் என்ற விதையை!






ஊன்றி இருக்கிறோம். அதை விதைத்தவனே!
உண்ண வேண்டும் பருவம் அறிந்து
அறுவடைக்கு வருவோம்.

அவள் :- ஹே பிரபோ! ஹே தயாநிதி! ஹே கருணா
சாகரா! விதை விதைத்தவன் உடன்
காவலுக்கு இருந்தால்தானே, பயிர் பாழாகாது?
தோஷ (குண)ண்ணா! கற்பனை பறவைகளும்!
காமக்குரோதாதி விலங்கினங்களும்! ஆட்டுமாடுகளும்
பயிரை பாழ் பண்ணிவிடுமே என் செய்வீர்?
அவன் :- (பலமாக சிரித்துவிட்டான்) பரவாயில்லையே
நன்றாக பேசுகிறாயே? இதை எவரிடம் கற்றுக்
கொண்டாய்?
அவள் :- ஹே பிரபோ! வேறு எவர் உளர்? எல்லாம்
தாங்களிடமே! தாங்கள் கடைக்கண்பார்வையும்!
மலமற்று குறும் சிரிப்பே போதுமே! வேறு
என்ன வேண்டும்?



அவன் :- ஹே என் அன்பான மழலையே! கலங்காதே!
எம்மை! நம்பும் உனக்கு! யாது காயம் யாதே,
அவன்! ஓர் வட்டம்! போட்டு விடுவான்
அது மாயாவின்! வட்டம் ஆகும்.
அதைத் தாண்டி, எவரும்! எதுவும்! வராது!
வரமுடியாது! வர இயலாது!! இது உறுதி.
அவள் :- இந்த ஸத்திய வாக்கை! இந்த ஏழை அம்பி!
எப்படி நம்ப முடியும் பிரபோ?
அவன் :- இதற்கு இருவிதமாக, ஸ்ரீமந் நாராணன் சொல்வீர்
தோன்றுந் துணைவன்! என்றும், தெய்வம் மனுஷ்யரையும்!
என்றும், சொல்வர் தெரிந்தாய்?
அவள் :- புரியவில்லையே பிரபோ?
அவன் :- இரண்டுமே, ஒரே அர்த்தம் தான். அதாவது
தெய்வம் இக்கலியில், நேரில் தோன்றாது! தோன்ற
கூடாது! தோன்ற இயலாது!

ஸ்ரீ கோவிந்தா




மனித வடிவில் வருபவர்களே உறவு! சுற்றம்! நட்பு! கணவன்! மனைவி! குழந்தை என சொந்த! பந்த! பாச! உறவாக காணுதே. அங்கு உன் மனக்கண்கள் உன்னை ஏமாற்றுகிறது என உணர்.

நம்பும் உள்ளங்கள் காக்க

அவன்:— உன் போன்ற மனித வடிவங்கள் வர வேண்டும். வந்தே ஆக வேண்டும். வந்தே தீரும். இது பிரமாண உண்மையாகும். உன் ஓர்மை! நம்பிக்கை! உருக்கம்! ஏக்கம்! கண்ணீர் பெருக்கம் உன்னியல்பால், வேறு கதி இல்லை! என்ற தீவிர வைராக்கியம்! இவை இருந்தால், உன் சாதனையை அனுசரித்து, தெய்வம் நேரில்! அவசியம் வரும். உன் அம்மா! அப்பா! உறவு! சுற்றம்! நட்பு! (இந்த) இவை வேஷம்! அணிந்து தான், மூகவரி வருவான். வேஷம் கண்டு கலங்காதே! மயங்காதே! பயம் சந்தேகம் வேண்டாம். எல்லாம் நீயே! என நம்பு! உன் நம்பிக்கை வீண் போகாது. அவசியம் வருவான்.

அவள்:— ஹே பிரபோ! எப்படியோ, சாக்கு போக்கு சொல்லி, இந்த அடியாரை சமாதானம் படுத்தி விட்டீர்.



# சக்குவின் 72

ஒரு வாசகம் :—

ஹே கமல கண்ணா!
உனக்கு அன்பர்கள்
கோடி கணக்கில் இரு
க்கலாம். அதனால் எம
க்கு என்ன பிரயோஜனம்?
ஆனால் உனக்கு பிரயோஜனமே

## எமக்கு நீ ஒருவனே தெய்வத்யம்

அவன் :— கொழுந்தே! இது சாக்கும் போக்கு! என்ற வாசகம் இல்லை. இது **ஸத்திய** வாசகமாகும்.


அவள் :— எம் குருநாதா! சரி சரி! உம்மை நம்புகிறேன். உம்மை நம்பாமல், வேறு வழி இல்லை. போவதாக முடிவும் பண்ணி விட்டீர். அந்த முடிவை மாற்ற முடியாது தான். எம் கடைசி கேள்வி?

## இன்றுபோய் நாள் வந்துவிடுவீர் அல்லவா???????

(அவன் சிரிக்கிறான்)

அவன் :— என்ன கொழுந்தே! இப்படி கேட்டு விட்டாய்? நாளை வருவதாக இருந்தால், இன்று போக வேண்டியதில்லையே?

அவள் :— அப்படியானால் போக வேண்டாம். இங்கேயே இருங்கள். அடியார் தாங்களிடம், எந்த தொந்தரவும் செய்யமாட்டோம். யாம் சாப்பாடுவதை, சாப்பிட்டுவிட்டு, இங்கேயே, நாம் இருவரும், ஸ்ரீமகவன் நாம ஸ்மரணையுடன் இருப்போம். நாம் இருவரும் ஒன்றாகவே, பரமபதம் சென்று விடலாம்?



**ஸ்ரீ பகவான் (73)**

வாசகமாவது:—
அக்கோடி அன்பர்களுள் நீயும் ஒருவன்தான் எமக்கு **பேதம்** இல்லை. உன் உள்ளமே எம் ஆலயம்

உன் உள்ளத்தைமட்டுமே எமக்கு கொடுப்பாயாக வேறு எதுவும் வேண்டவே வேண்டாம். கண்ணன்.

அவன்:— பரவாயில்லையே தொடர்ந்தே! எமக்கு சாப்பாடா முக்கியம்? அன்பர்கள் **கூட்டமே** முக்கியமானதும். அவர்கள் உலகமெங்கும், வியாபித்து இருக்கிறார்கள். அவர்களுக்காகவே, யாம் இருக்கிறோம்.

அவள்:— அவர்களுள் **யாமும் ஒருத்தி!** என்பதை, மறந்து விட்டீர்களா தேவாதி தேவா?

அவன்:— அவர்களுள், நீயும் ஒருத்தியே. அதை யாம் ஒப்புக் கொள்கிறோம். அவர்களை எல்லாம், பார்த்து விட்டு சீக்கிரம், வந்து விடுகிறோம். என்கிறோம்.

அவள்:— அவர்களை எல்லாம், பார்ப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும்?

அவன்:— குறைந்தபட்சம் **ஐந்து** வருடமாகும்.

அக்குழந்தை உடனே மூர்ச்சையாகி விட்டாள். அவன் அவளுக்கு, சைத்ய உபசாரம் செய்து, மூர்ச்சை தெளிவித்தான். அவள் கண்திறந்து, அவனைப்



உ

தோன்றுத்து வைகை வரும் ஸ்ரீபகவான் (74) உன் உறவு! சுற்றம்! நட்பு! வடிவில் தான் முதலில் வருவான் அப்படி வருபவன் உன் வினைக்கு ஏற்றபடி தான் கொடுப்பான் எடுப்பான்! வருவான்! போவான்!

உன் சர்வார்ப்பணம் உறுதியாக இருந்தால் தொடரும்.

பார்த்தாள். **ஐஸ்வரத்தில்!**

**உடனும்!** என்றாள்.

அவன் ஒரு முறுவலாய், அவள் அறியாமல் சிரித்தபடி

கொழுந்தே! **ஐந்து!** மாதங்களில் வருவோம்.

என்றான்.

அக்குழந்தை இம்முறையும், மூர்ச்சையானாள்.

அவன் உபசாரம் செய்து, மூர்ச்சை தெளிவித்தான்.

அவள் கண் திறந்து பார்த்தாள், ஐஸ்வரத்தில்

**உடனும்!** என்றாள்.

அவன் அவள் கவலையை தடவிய வண்ணம், சற்று பொறுமையாக உணர்ந்திருந்தாய்! சரி உனக்காக

**ஐந்து!** மாதங்களில் வருவோம். என்றான்.

அவள் அவன் ஸ்ரீபாதங்களை, இருகரங்களாலும் இறுகப் பற்றிய வண்ணம், அதி கெஞ்சலாக,



வருபவனை அந்த (75)

# க்ஷணமே

உணர முடியும்

சர்வார்ப்பணம்!

அன்றி குறையாக இருந்தால்

உடனே கண்டுகொள்ள முடியாதுதான்


தொடரும்.

# உயிர் நீங்காது ஐயா!

என்றாள். அவள் கண்களில், கண்ணீருடன் கொட்டிக் கொண்டிருந்ததை இதைக்கண்ட, அவன் கண்களிலும், கண்ணீர் பனித்து நின்றது. அவன் அவள் தலையில், தம் இருகரமும் இலகுவாக, தாங்கிய வண்ணம், தம் **பவளவாயை!** அவள் சகஸ்ராரத்தில் பதித்த வண்ணம் முத்தமிட்டு, எம் அன்புருவே! **ஐந்து** தினங்களில் வருவோம். என்றான். அவள் தன் பாவாடையால், அவன் கண்களையும்! **திருமுகத்தையும்!** துடைத்தாள். பின் அவன் மடியில் அமர்ந்த வண்ணம் (அவளால் அந்த வார்த்தைகளை சொல்ல முடியவில்லை)

## அஞ்சு நாழ்லெ வந்துடுவெலெ?

(அஞ்சு நாழ்லெ வந்துடுவேல்லே என்றாள்)



அன்பு உன்னுடைய
உருக்கம்! 76
ஏக்கம்! கண்ணீர்
நெருக்கம் இருந்தால்
அம்மாயாவடிவம்
**மாறும்!**
**உணர்த்தும்** அல்லது
இது சத்தியம்
முடிந்தது.

(அவள் குரலின் தடுமாற்றம், இதை குறிக்கிறது)

அவன்:- அவசியம் நிலையறிந்து வருவோம்.

அவள்:- அப்படீன்னு அந்த நாள்தானே?

அவன்:- இது எம்கணக்கு! அது உன் கணக்கு!

அவள்:- புரியலியே!

அவன்:- அப்புறம் புரியும்.

அவள்:- அப்புறம்ன எப்புறம்?

அவன்:- உன்தரிசனம் எப்போ கிட்டுமோ அப்புறம்.

அவள்:- குழப்புறியே ஏன்?

அவன்:- குழம்பினாத்தானே, தெளிய முடியும்?

அவள்:- தெளிந்த பின் குழப்பம் வராதே?

அவன்:- இப்போது குழம்பித்தானே இருக்கிறாய்?

அவள்:- இந்த குழப்பம் எப்போ தெளிவாகும்?

அவன்:- நாம் இருவரும் சந்திக்கும் போது!

அவள்:- அது எப்போ?

அவன்:- உன் குழப்பம் தெளிவடையும் போது.

அவள்:- சீக்கிரம் வந்துடு **கண்ணா!** என் சொன்னவள், செயலற்று நின்று விட்டாள்.
(நிற்க வைத்து விட்டான்)



அப்பேதைப்பெண் புலம்பலாவது:- (77)

ஹே கபட நாடக சூத்ரதாரியே! வந்தது நீதானா? எம்மை மயக்கி விட்டு நீ எப்படி சென்று விட்டாய்? உன் ஆட்டத்தில் மயங் காதவர் எவர் ஐயா? எம்மிடத்தில் என்ன குறை கண்டாய்? இப்படி அப்பேதையை விட்டுச் சென்று விட்டாயே? தொடரும்.

அவன் தாம்பூரை, இடக்கரத்தால், இடையில் தாங்கிய வண்ணம், வலக்கரத்தால், ஒய்னாவை பிடித்த வண்ணம், ஒய்னாதையை உயர்த்திய நிலையில் **அபயஸ்தம் காட்டி!** அந்நேரம் **ஆசி!** வழங்கிய வண்ணம், சென்று மறைந்தான்.

**மெ**துவாக எழுந்த அவள், தம் பாவாடை சுருக்கத்தை, லேசாக உதறி நிமிர்த்திய வண்ணம், பாவாடையை, கவனித்தது அக்குழந்தை? **அதில்?** அப்பாவாடையில், புல்லாங்குழல், ஆள்காட்டி விரலும், பெருவிரலும், லேசாக தாங்கிய வண்ணம், மற்றும் மூன்று விரல்களும், நிமிர்ந்த நிலையில், அவ்வபயஸ்த காத்தில் உள்ளங்கையில், **சுதர்சன! சக்கர ரேகை!** பதிந்த நிலையில்! ஓர் **சித்திரம்!** பதிவாகி இருந்ததை, கண்டாள். அப்படியே மயமாகி விட்டாள் அப்பேதைப்பெண்.



நீ மாமாய திருடன் (78)
இல்லவே இல்லை.
நீ ஓர் மக்கத் திருடனும்.
உன் பேச்சில் மயங்காதவர்
யார் உளர்? வந்தது
நீதான் என தெரிந்தி
ருந்தால் இவ்வளவு உன்னை
விட்டு விடுவாளா? அன்று
உன் அன்னை யசோதா இருந்தாள். அவள்தான்
உன்னை உறவோடு பிணைத்தாள். தொடரும்.

**ஐந்து!** தினங்கள் கடந்தன. **வந்தவன்!**
**யார்?** என, உணர்ந்து கொண்டதுன்மையினால்,
**எம்** கணக்கு! **உன்** கணக்கு! என சொன்ன
வாசகம், அவள் அறிவுக் கண்ணை, சற்று திறந்தது
போலும்?
அன்று வந்தவன்! இதய வாசியாக இருந்து
இதை சொன்னான்.

(1) பொறுமையே பூஷணம் & கவசம் ஆகும்.
(2) அப் பொறுமையை பெற விட்டுக் கொடு.
(3) எது நடந்தாலும்/ எதை கேட்டாலும்/ நலம் என நம்பு.
(4) நடப்பதில்! கிடைப்பதில்! இருப்பதில்! திருப்தி கொள்.
(5) இந்நான்கும், பெற நாவடக்கமாக இரு.

அடங்கு! அடங்கு! அடங்கு! அடக்காதே! அடக்காதே!
அடக்காதே! என **ஒலித்தது!** அங்கே
மனமும்! விதியும்! அமைதியடாது பாடுபடுத்தியது போலும்
**பால்** போன்ற உள்ளம் பொங்கும் பொங்கிய பால்,
ஜலம் வேகமாக விட்டு, சாந்தி செய்வது போல்,
↘ வீண் போகாத வழி



(79)

பின் சகாதேவன் என ஒருவன் இருந்தான் அவனும் உன்னை பிணிக்க வல்லவனோ? ஆனால் இன்று உன்னை கட்டுவார் யாரும் இல்லாமல் யதேச்சையாய் திரிகிறாய் போலும்?

எம்பெருமானே! நீ பக்தன் என்ற பிணைப்பால் கட்டுப் படுபவன் தானே? 82 ம் பக்கம் தொடரும்.

**பொறு! பொறு! பொறு!** என ஸாந்தி செய்வாள். இடையறாத ஸாந்தியின் பொறுமையினாலும், **எல்லாம் நீயே!** என்ற தாரக மந்திரத்தினாலும், ஓர் நிலையிலிட்டு விட்டாள் **ஸாந்த சக்தி!** என ஆனாள்.

**26** ஆண்டுகள் ஓடிவிட்டன.

**ஓர்** நாள் குளத்தில், ஜலம் எடுக்க சென்றவள், **மனம்!** செயல் இழந்து **அறிவு!** செயல் மறந்தும் நிலையில், குடத்துடன் ஜலத்தில், விழுந்து விட்டாள். அப்படி விழும் நிலையில் **ஹரே கண்ணா!** என அலறிய வண்ணம் விழுந்தாள். உடனே எமதையன்! அன்று அந்த தோற்றத்தில் வந்து, உபதேசித்தானே அதே வடிவத்துடன், வந்தவன், ஒரு கரத்தால் அவளையும், மறு கரத்தால், குடத்தையும், தாங்கிய வண்ணம், கரை சேர்த்தான் எம்பிரான்.



ஓர் உண்மை. (80)
பக்தனின்முன்
ஸ்ரீ பகவானின் மாயா!
செயலற்றதாகிவிடும்.
காரணம்:— பக்தன் நாம
ரூப குண தோஷங்களை
ஸ்ரீ பகவன் நாம சர்வார்ப்பணத்
தால் மனதுடன் அர்ப்பணம்
செய்த தன்மையாலும். தொடரும்.


## உடல்! உலகம்! வந்தருக்கு!

அவர்:— ஓம் கமல கண்ணா! கமல நயனா! கமல பாதா! கருணைக்கடலே! காருண்யமூர்த்தி! ஆதிமத்யானந்த ரஹிதா! ஜோதிநித்யானந்த சொரூபா! கபட நாடக சூத்ரதாரி! மாதவா! மதுசூதனா! யாதவா! யதுநந்தனா! கோபிஜன வல்லபா! கோப கோபால, கோ, சம்ரக்ஷகா! ஆபத்பாந்தவா! அனாத ரக்ஷகா! தீனதயாளு! தீனபந்தோ! தீன ரக்ஷகா! கோடிசூர்ய பிரகாசா! பத்மநாபா! புராண புருஷா! புருஷோத்தமா! புண்ணிய சொரூபா! வேணு விநோதா! விஜய கோபாலா! கோவிந்தா! நந்தபாலா! யசோதை பாலா! த்வாரகாநாதா!

## பாண்டுரங்கா! பண்டரிநாதா! ஹரே விட்டல்! ஹரே விட்டல்!

என அலறி, கதறி, மெய்சிலிர்த்து, உடல் வேர்த்து, ஆனந்த பாஷ்பம், அவன் திருவடியை சுத்தி ஈரமாக்க, அழுது தொழும் போது **வந்தனையை!**

ஏழையின் திருடன் கண்ணனுடைய சௌலப்ய தர்ஸனம்; நிதர்ஸனமாயிற்று. மாயை மறைந்து அவன் பிரத்யக்ஷமானான்.



மனம் மறைந்து, அறிவாக மாறி (61)
விடுகிறது. அறிவின்
சொரூபமே ஸ்ரீபகவான்.
ஆகவே வேறு எந்த முயற்
சியும் பயிற்சியும் இல்
லாமல், ஸ்ரீ பகவத் தரிசனம்
உடனே வசித்தமாகும். தாரணைச்
சர்வார்ப்பணம் ஒன்றுவே மனத்தை மறைந்திடு
என்று உரைவென்கோ முடிந்தது.

ஸ்ரீபகவானின்! மாயா உண்மை பக்தனிடம்! செல்லா
காசாகி விடும் என்பது உண்மையாயிற்று.
இருந்தும் கொண்டு, அக்குழந்தையை 26 வயதை
உடைய அவள், அவனுக்கு என்றும் குழந்தையே.
உச்சிமோந்து, முத்தமிட்டு அவள் சொன்ன வாசகம்:—
அவன்:— கொழுந்தே! என வாய்திறந்து
ஆரம்பித்தவனின், வாயைக் கூட வலக்கரத்தால், பொத்
தியவனை, அவள் சொன்னாள்:—
அவள்:— நலமா? என்றுதானே கேட்கப்
போகிறீர்? பூவோடு! சேர்ந்த நாரும்!
மணம் பெறும் என்பார்கள். ஆகவே உன்னோடு
சேர்ந்த யாம், ஆரோக்கியமே.
அவன்:— எம்மீது கோபமா சகி?
அவள்:— கோபமா? அது எப்படி இருக்கும்?
கருப்பா? சிவப்பா?
அவன்:— அந்த அளவுக்கு பக்குவம் படைத்துவிட்
டாளா அவள்? (தன்னை உணராமலே இவ்விதம் கேட்டான்)
அவள்:— அவன் என்றால் எவன்? இவனேதானே அவன்?
அவன் எங்கும் தனியே இருக்கிறானா?



79ம் பக்க தொடர்ச்சி (82)

என் பக்தி அத்தனை உறுதி இல்லையா? உன் கணக்கு! என் கணக்கு! என சொன்னாலும் இந்த அமைப்பில் பக்தியும் படாவிலை? போதுமா? கல்லைக் கண்டால் நாயைக் காணோம்! நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்பது போல் தொடரும்.


அவன்:— இதை எப்படி உணர்ந்தாய் சக்கு?

அவள்:— யாமறிவது? உணர்வதா அது? இங்கும் நீயே! அங்கும் நீயே! உன்னையல்லால் எங்கும் நீயே! எவர் இங்கு உள்ளார்? (இந்நிலையால் அவன் தன்னை உணர்ந்தான்)

அவன்:— ஆகா! ஆகா! தெளிவாகத்தான் இருக்கிறாய் ஆனாலும், கொஞ்சம் சலிப்பு அலுப்பு! தோற்றுகிறதே? அதனால்தான் இப்படி புரட்டி, புரட்டி, கேட்கிறேன்? என்னை மன்னித்துவிடு! சக்கு! என, அவள் திருவடியை தீண்டப் போனான். எம் திருடன்.

அவள்:— சரேலென விலகிக் கொண்டாள்.

நீயோ சூதறிந்த கள்வன்! சூத்திரதாரி! இந்தப் பாண்டுரங்கனை அன்றி வருடைய அந்தரங்கங்களையும் லீலையையும் மனதையும் அறிபவனாயிற்றே. மனம் படைத்த இந்த ஜீவனால், அதை உணர முடியுமா?



உன்னை சாமானியன் என கண்டது எம் கவனக்குறைவே. எம்பாபோ! ஹே தயாநிதி! கிருபாசாகரா! கண்ணே ஸ்ரீநிதி! இவ்வேழையை கைவிட்டு விடாதே ஐயா! கைவிட்டால் உனக்கே தான் சிறுமை! ஆனால் நீ சத்திய சம்பன்னன். அகில எமக்கு பூரணநம்பிக்கை இருக்கிறது என தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள் அம் பேதைப்பெண்.

முடிந்தது.

அவன் :— ஏன் சகீ? உன்னிடம் நேரே ஓர் சந்தேக கேள்வி தோன்றுகிறதே? அதையாம், தெரிந்து கொள்ளலாமா?

அவள் :— செய்வதையும் செய்துவிட்டு, ஒன்றும் செய்யாதது போலும்! ஒன்றும் தெரியாதது போலும்! **பாசாங்கு ஏன்?** திருடனிலும், திருடன் பக்காத்திருடன் நீர்.

அவன் :— ஏன் இந்த மிடுக்கை சகீ? விஷயத்திற்கு வாயேன்?

அவள் :— என்று எம்மை கண்டீர்? என்று எமக்கு உபதேசமும்! வாக்கும் தந்தீர்? **அன்று நாள்!** என்ன? **அன்று நாள்!** என்ன? இதுதான் (ஒன்றுதான்) **ஐந்து!** தினங்களா? வெளியே பயிரை மேய்ந்தால், அம்பயிர் என்னவது??????? அம்பயிர் யாரிடம், அபயம் கேட்கும்???



இங்கு **பிரிவு** (64) எனப் பேசப் படுவது **உடல்** பிரிவாகும்.
அவன் சூட்சும உடல்.
அவள் தூல உடல்.
இவ்விரண்டும் சம்பந்தம் இல்லாத தன்மையால் பிரிவு தோன்றுகிறது.

தொடரும்

அவன்:— ஓஓஓ ஓஓஓ அந்தக்கதையா இது?

அவள்:— அந்தக் கதையோ? இந்தக் கதையோ? யாம் அறியோம்? (அவன் இடைமறித்தான்)

அவன்:— **சொந்தக்கதை**! என்பதை ஏன் விட்டுவிட்டாய் சாந்த சக்தி?


அவள்:— சொந்தக்கதை எது? **நீ** எம் சொந்தம் **யாம்**! உம் சொந்தம்! வேறு சொந்தபந்தம் எது?

அவன்:— நீயும் சொந்தம் என்றும், யாம் உன் சொந்தம் என்றும் ஆன பின், **பிரிவு**! என்பது எப்படி வந்தது? எப்படி வர முடியும்?

அவள்:— உண்மைதான் பிரபோ! பிரிவு தோன்றியதே? அதன் காரணம் என்ன?

அவன்:— உன் மனம் உன்னை ஏமாற்றியிருக்கிறது? அதற்கு யாமா பொறுப்பு?

அவள்:— எம் மனம் எம்மை ஏமாற்றியதா? புரியவில்லையே பிரபோ? எங்கே இதற்கு சற்று, விளக்கம் கொடுங்கள் பார்ப்போம்?



இப்பிரிவு நம் மனதால் தான் (65)
உண்டாகிறது. அறிவால்
உண்டாக முடியாது.
உண்டாக இயலாது.
மனம் நாம் தேர்ந்தெடுத்தது.
அறிவு கட்டுப்படுத்த முடியும்.

மனம் அறிவாகும் வரை இக்கேள்வி இருந்தே ஆகும். அதுவே விதியின் நியதி. முடிந்தது.

(இதைத்தான் [illegible] என பேசப்படுகிறது)

அவன்:— நீ எதை பிரிவு என்கிறாய்?

(A) அவள்:— உங்கள் நினைவில், உம் தரிசனம் கண்டு 20 வருடங்கள் என்ற காலம் கடந்து விட்டது.


(B) ஐந்து நாளென்று ஓர் கணக்கு சொன்னீர். ஆனால் இருபது வருடங்கள் ஆகிவிட்டது.

(C) உருகி ஏங்கி அழைத்தால் வருவோம் என்றீர். பல முறை, கதறி கதறி அழுது, ஓலமிட்டிருக்கிறேன். உம் காட்சி இல்லை.

இவைதான், பிரிவின் விளக்கங்கள்?

அவன்:— இதற்கு எம் பதில் சார்ந்து கவனி:—

(A) அன்றும்! இன்றும்! என்றென்றும்! யாம் உன்னுள் அந்தர்யாமியாக இதயவாசியென மனச்சாட்சியாக உள்ளோம். உன்னை விட்டு யாம் பிரிந்ததில்லை. எம்மை விட்டு நீ பிரிந்ததில்லை. வெளியில் நாமரூப காட்சியில் மனம் மயங்கிய தன்மையால், எம்மை உள்ளபடி உணர முடியவில்லை.




காலக்கணக்கில் (86)
நாமரூப சம்பந்த
தோற்றம்! இருப்பு!
மாற்றம்! மறைவில்!
ஏற்படும் மேன்மைய தற்பரி
சொரூபியாகும்.
நாமரூபமே பொய்யே. அகண்ட,
உள்ளிருக்கும் சைதன்யமே

மெய். அது காலாதீதமான ஏக பொருளும்! அனைத்
பொருந்தியால்! உணர்வது அறிவானந்த சொரூபியாகும்.

(B) இரண்டாவது கேள்வியில், காலக்கணக்கை!
குறிப்பிடுகிறாய் போலும்?
இங்கு **உன்** கணக்கு. **எம்** கணக்கு என இரண்டுண்டு.

உன் கணக்கு:— நாமரூப தோற்ற இருப்பும்!
போக்கு வரவுடன்
அதன் இயக்கத்தைக் காட்டியதாகும். அது வந்து!
(நாமரூப காட்சி)
இருந்து! மாறா! மறையக் காட்டியதாகும். அதனை
**குணதோஷம்!** பின்னிவிட்டு விலகாவே.
அதனால், இன்ப துன்பமும்! ஜனன மரணமும் உண்டு.

எம் கணக்கு:— நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்களை
**வீண்** கண்டு, இயங்கும் **மனமானது!**
**அறிவில்** (ஸ்ரீபகவானில்) ஒன்றாக வந்து,
மனமே அறிவாகும் **பக்குவபக்குவம்!**
கணித்து அந்த காலநேரம் கண்டு **அசஞ்சலமே!**
இயங்குவதாகும்.



வேலியே பயிரை மேய்கிறது 87

இதன் விளக்கமாவது
இவ்வாசகத்திற்கு
உலக நியதியில்
கண்டாயோ? அங்கு
காவல் காரன் சரி இவ்வினைபொருள் படும்.
தொடரும்.

இங்கு நீ மனதையும், அதன் இயக்கத்தையும்
கற்பனை பண்ணி, காலம்! கணிக்கிறாய்.
இங்கு யாம், அறிவையும்! அதன் பொறுமையையும்
அதனை ஒப்பிடும், மனமே அறிவான பக்குவத்
தைமட்டும்! கணிக்கிறோம். ஆகவே இங்கு
காலம் பொய்! பக்குவமே மெய்! ஆகும்.
ஓம் ஆனந்தகுழந்தாய் சக்கு! உன் வாக்கில்,
வேலியே பயிரை மேய்கிறது, என்ற ஒர்
குறைவான! வாசகம் கண்டோம்.
இதைக் கவனி.
உன் உள்ளத்தில் பக்தி! என்ற ஏர் கொண்டு உழுதோம்
" அன்பு! என்ற ஜலம் நிரப்பினோம்.
" பயிர்களை! என்று விதைத்திட்டோம்.



உ அதே வார்த்தை (68) தெய்வீக நிலையில் உணரும் போது. **பயிர்** வெளிக்கே சொந்தம். இங்கு பயிர் என்பது சிஷ்யன். வெளி என்பது குரு.

பயிர் என்ற சிஷ்யனின் பக்குவம் தொடரும்

அஞ்ஞானம் என்னும் **இருள்!** (சந்தேகம் விபரீதங்கள்!) அப்போதைக்கப் போது பிறந்து (எழுந்து கொண்டே இருக்கிறோம்) எழுந்து விட்டோம். இதற்கு அத்தாட்சி **யாம்** (சத்தியம்) என்ற **திட உணர்வு** ஆகும். எவராலும்! எதாலும்! உன்னை அசைக்க முடியாது.

**யாம் தோன்றாத்** (தோற்றம்!!) **துணைவன்** ஆகும். எப்படி என்றால்? உன் அம்மா! அப்பா! கணவன்! மாமன்! மாமி! நாத்தி! உறவு! சுற்றம்! நட்பு! இவை அனைத்திலும், **யாமே!** அதன் மூலமாக உள்ளோம். அப்போதைக்கப் போது ஆவன செய்கிறோம். எப்படி என்றால், உன் **வினை**/ மனை **நிலை**/ அறிந்து, இன்பமாகவும் துன்பமாகவும்! ஆவன செய்து வருகிறோம்.



பண்ணி அவரி
**பழம்** (69)
ஏனாக்கி அப்
படித்தை வைத்துளே

சுவைக்கிறேன். வேறு
எவரும் அதை தொட
முடியாது. தொட இயலாது. இது ஸ்ரீமஹான்
கனிந் அநுபவமாகும். முடிந்தது.

இதை, உடல் உணர்ச்சியில், சிக்கிய சில
சமயங்களில், இதை உணராய்.
பக்தி மேலிட்டால், உடல் உணர்ச்சி கெட்டு,
அக **உணர்வு!** மேலோங்கும் போது உணர்வாய்.
இதுவேயாம் **பயிர்காத்து!** நிலையாகும்.

(A) எம்மையன்றி, எமக்கு அன்னியமாய்! எதுவும்!
எவரும்! இல்லை என்பதே சத்தியம்.

(B) எம் இயக்கமன்றி, வேறு எந்த இயக்கமும், எங்கும்!
எதிலும்! இல்லை என்பதே சத்தியம்.

(C) அனைத்தும், எம் பொருளன்றி, எவர்க்கும்!
உரிமை உடைமை
எதுக்கும்! பொருள் இல்லை என்பதே சத்தியம்!


(D) **யாம்!** இன்றில் எவரும்! எதுவும்! எங்கும்! எதிலும்!



ஜீவ ரகசியம்
என்றால்? நாம
ரூப பொருள்களை
லக்ஷியமாய் கட்டி
மனமும் வினையும் பின்ன
விட்ட ஜீவர்கள் மனதால்
கர்ப்பமையும் நிலையிலும்.
வினைகள் கதியும் நிலையிலும் தொடர்கதை
யென ஓர் பிறவிப் பின்னல்
தொடரும்

90

அசையாது! அசைக்கமுடியாது! அசைக்க
இயலாது. ஆனால் உன் மாயா மன மானது!
சிவ சமயங்களில், அறியாமையால்,
**நான்! என்றல்! எனது!**
என விகற்பித் திரிந்து கொண்டு, மூட்டி மோதி,
மூக்குடைந்து! மண்டையுடைந்து அல்லல் படுவது
**ஜக, ஜீவ, நிலை!** ஆகும்.
சில வேளைகளில், உன் வினை, சிவசிவ விபரீதத்தை
உண்டு பண்ணி விடும். அது சமயம், உன் மனம்
அறிவின் வசம் நில்லாமல், நான் தோன்றித்தனமாய்,
**தனதாக!** பாவங்கள் பண்ணி, கடும் அல்லல் படும்.
யாம் சாட்சியாக இருந்து கொண்டு அதன் வேகத்தை
தணிப்போம். இதை நீ அறியாய்! அதை அதை
**யாம்!** ஒருவனே அறிவோம். என முடிக்கிறான் அவன்.



காட்டி மீளமுடியாத ஓர் இன்பபோதையை

ஆனந்தம் அல்ல

உண்மையான அச்

ஜீவன் மனம் மகிழும்

நிலைய எம் மாயா காரி

யத்தில் ஒன்றுபட்டு யாம் சாயுஜ்யமாய்

இருந்து ஆனந்திப்பதே ஜீவ ரகசியமாகும்.

அவளுக்கு, அறிவு ஸ்திரமான தன்மையிலே,

அப்போதைக்கப்போது **அவன்!** நேரில்

பிரத்தியட்சமாகி, தெளிவித்தருவான்.

ஓர் நாள் உரையாடலில்?

அவள் :— ஹே கண்ணா! முன்பு ஓர் சமயம்! உன் வாக்கில் பரம பதம்! என ஓர் வாசகம் வந்தது.

அதன் பொருள் என்னமாதவா?

அவன் :— அது பிரம்ம லோகம்! கைலாயம்! வைகுண்டம்! என்ற

**பதமுக்தியை** குறிக்கும்.


அவள் :— அதன் நிலை என்ன? மாதவா??

அவன் :— அது பேரானந்த வாழ்வு!

அவள் :— பேரானந்தம் என்றால், **பெயர்** அளவில் தான் ஆனந்தானுபவமா?

அவன் :— ஆமாம் சக்கு! ஸ்ரீ பகவன் நாமா விலே, ஓர் (அறிவின்) **கண்ட** ஆனந்தமாகும்.

அளவுக்கு உட்பட்டதன்றாம் ஸ்ரீ பகவானை கண்டு என்றும் பொருள்படும்.



ஜீவ அழிப்பு என்றால் ஒரு ஸத்குரு மூலமாக நாமரூப உலக உண்மை இன்மையை தெரிந்து கொண்டு மனதை அறிவாக்கி அறிவை பேரறிவாக்கி பேரறிவை அகண்டானந்த தம் என்ற சமுத்திரத்தில் கலக்கச் செய்து பிறவா நிலையாமை ஜீவன் முக்தியை அடைவது ஜீவஅழிப்பாகும்.

அவள் :— அப்படியானால் (அளவில்லாத) அகண்ட ஆனந்தம், என உண்டா? கேசவா??

அவன் :— ஆமாம். அதுவே முடிவில்லாத முடிவிடம் அது பரமுக்தியை / ஜீவன் முக்தியை குறிப்பதாகும்.

அவள் :— அது என்னநிலை? எப்படி அடைவது? அதன் அனுபவம் என்ன?

அவன் :— அதன் விளக்கம் ஸத்குரு ஒருவரே, அறிவார், உணர்வார், விளக்கமும் அவர் மூலமாகவே பெற முடியும்.

அவள் :— ஸத்குரு அத்தனை அதீதமானவரா? இதனை சுருக்கமாக அவர் நிலை என்ன? உன் நிலை என்ன?

அவன் :— அவர் நிலை, ஜீவஅழிப்பு, என் நிலை ஜீவ ரக்ஷிப்பு ஆகும். என் நிலை, மனம் அறிவான நிலை. அவர் நிலை, மனம் அறிவாகி, அவ்வறிவு பேரறிவாகும் நிலை.

அவள் :— ஜீவ ரக்ஷிப்புக்கும், ஜீவஅழிப்பிற்கும் சிறிது விளக்கம், அருளுங்கள் பிரபோ.



ஓர் நாடியால் யாம் (93) மாயாவை வைத்து விளையாடும் நாடியில் பெரிய வியாபாரி. மனித ஜீவன் மட்டும் மனத்தால் கட்டுண்ட ஓர் சிறிய வியாபாரியாகும். தொடரும்.

அவன் :— குழந்தாய்! கவனமாக கேள்.

(1) ஜீவ மொழிபு :— ஓர் ஐந்து வயது ஆன சிறுவன், அவன் தந்தை, அழைத்துச் செல்லும் போது, ஓர் இடத்தில் (மங்கலான இருளில்) ஓர் வெட்டிப்பட்ட பட்ட **கட்டையை** கண்டு, பேய் என அஞ்சுகிறான். அச்சிறுவன் தந்தையின் உதவியை நாடுகிறான்.

அவன் தந்தை சொன்னது :— குழந்தாய்! யாம் உன் அருகில் இருக்கும் போது, உனக்கு பயம் வேண்டாம். யாம் பார்த்துக் கொள்வோம். உன்னை எதுவும் எண்ணவும் செய்து விட முடியாது. யாம் சர்வசக்திமான்.

**யாம் இருக்க பயம் ஏன்?**

என அபயஸ்தம் கொடுத்து கூட்டிச் செல்கிறார். மேலே கூறியது மெய்நிலையாகும்!

எப்படி என்றால் :— இவ்வுலகம் உனக்காகவே (ஜீவனுக்காகவே) உண்டு பண்ணிய, ஓர் **மாயா** காரியமாகும். உன்னிடம் மனம் இருக்கிறது. அம்மனதை உன் **வசம்!** வைத்துக் கொண்டு **அனுபோகு!** அதிகாரல் யாம் உன்னை மொழிபோம்.



ஆகவே எம் [illegible] மாயாவின் திருஷ்டியாகிய இவ் பொருள் வுலகையும் கிரியும் நிலையில்லாதது எனச் சுட்டிக்காட்டி பொய் எனச் சொன்னோம். அம் மனித ஜீவன் மனம் படைத்தன் மையால் நாடகம்.

அளவுமீறும் மனம் போது, அறியாமையே, உன்னை அழுத்து! பாவம் என்னும்.

இவ்வுலகம் உனக்காகவே உன் அறிவுக்காகவே, எம்முடையதாக ஜீவ! திருஷ்டியாக இருப்பதால், இவ்வுலகையும்! அனைத்து தோற்றங்களையும் யாம் பொய்! என சொல்லக்கூடாது. சொல்ல முடியாது! சொல்ல இயலாது. அதுவே ஏம்! தர்மம்! அதுவே எம் ஜீவ ரகசியமாகும். (எம் திருஷ்டியை யாம் பொய்யென சொன்னால் ஜீவனாகிய உன்னால் அதைத் தாங்க முடியாது)

② ஜீவ அறிவு :— அதே சிறுவன்! ஓர் நாள் அவனுடைய ஆசிரியர் (குரு) துணையுடன்! செல்கிறான். அன்றும், அதே இடத்தில், அதே பட்டகட்டையை கண்டு, பேய் எனப் பயந்து கொள்கிறான். தம் ஆசிரியரிடம், சொல்லி பயம் கேட்கிறான். அவர் அக்கட்டையை, கட்டையாகவே காண்கிறார். தம் மாணவனின் பயத்தை, போக்கும் நோக்கில், அவனை அக்கட்டை, சமீபமாக அழைத்துச் சென்று, அவர் சொன்னது :



நாமரூப உலக 96
பொருள்கிற
விரும்பவும்! வாழ்கவும்
மாட்டான். அவன்
உலகம் செல்வாக்கான
கிளம்பும். அதனைக் கிலி

உலகம் வளம் பெருகும். இச் ஜீவன்
மனநலம் பெற்று விளையாட
மாட்டான் தொடரும்

குழந்தாய்! இது வெட்டப்பட்டு, பட்டுப்போன, ஓர் கட்டை! யென, சொன்ன தோடல்லாமல், அவனையும் தொடச்சொல்லி! அவன் தொட்டு அது கட்டையென, உணர் வைக் கொடுத்து.

சந்தேகம்! கலக்கம்! கலக்கம்! குழப்பம்! பயம்! இவை எல்லாம் உண்மைநிதி யல்லாது வேறு ஒன்றும் இல்லையென, திட உணர்வை கொடுத்து அவர் அருளியது.

பிரம்மம் ஸத்தியம்! ஜக ஜீவபரம்பரத்தை! என்ற திட உணர்வை கொடுத்து நான்! ஜீவன் என்ற, மயக்கம் நீங்கி, நாம்! ஆத்மா! என்ற ஸ்வய அனுபவம்! பெற வைப்பது, ஜீவ அழியாவம்.

என சொல்லி விளக்கம், கொடுத்தான்.



அதனால் இவ்வுலகம் இல்லாமல் போய் விடும். இது

96

எம்மாயாவின் விளையாட்டே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதில் இம்மனமானது மாயாவின் மகனை பற்றினால் அவனை விளையாட முடியும். வைத்தியத்தால் இவ் விளையாட்டை இதன் உண்மை என்னவென்றால்? தொடரும்.

அவள்:- ஹே பரம தயாநிதி! கிருபா ஸாகரா! ஆனந்த வடிவே! அற்புத கண்ணா! அமுத சொரூபமே! உன் கிருபையால், அடியேனுக்கு ஓர்

**ஸத்குருவை!** காட்டி அருள வேணுமென்று பணிவாக வேண்டினாள்.

அவன்:- அவசியம் காட்டி அருளுவோம். சத்தியமாக என சொல்லி விட்டு, சென்று விட்டான்

**ஓர்நாள்!**

எம்பிரபு அப்பெண் முன் பிரஸன்னமானான். அவள் அவனுக்கு பாத நமஸ்காரம் செய்து எழுந்து நின்றாள். புறப்படு! ஸத்குரு தர்ஸனத்திற்கு என்றான். அவள் பழம், புஷ்பம், தாம்பூலம் இவைகளை, ஓர் தட்டில் ஏந்தி புறப்பட்டாள். அவ் இருவரும், ஓர் சிறிய வனம் வந்து சேர்ந்தனர். அங்கு ஓர் மரத்தடியில், ஓர் வயோதிக ஸ்ரீ மஹாத்மாவை! கண்டனர். கண்ணன் முதலில், அவர் திருவடிகளில், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவர் ஸ்ரீ பாத தூளியை தம் சிரம் மேல் தரித்துக் கொண்டான்.



97

அம்மனையும்! அதன் இயக்கத்தையும்! நாமரூப பொருள்களையும்! எம்முடையதாக விட்டுவிட்டால் அம்மனம் நலம் பெறமுடியும். மாறாக தனதுடைமையாக்கிக்கொண்டால் அம்மனம் துன்பத்தை அடைவான். " அடைகிறான். முடிந்தவ.

அந்த **சத்குரு ஸ்ரீநாமதேவர்**! ஆகும்.

அப்பெண்ணும் ஸ்ரீ குருதேவர் திருவடிகளில் புஷ்பங்களை சொரிந்து, மண்டியிட்டு நமஸ்காரம் செய்து, எழுந்து நின்றாள். அப்போது தான், ஸ்ரீ நாமதேவருக்கு! **சேதை சக்தி**! ஏற்பட்டு அவ்விருவரையும் சுற்று சூழ்ந்து நோக்கினர். வயோதிகத்தால் உடல் அதிகமாகவே இளைத்து விட்டது போலும்? தம் சரீரத்தை, விருவதற்காகவே, அந்த இடத்தில், அவர் சேர்ந்து தெருக்கிருந்தார் போலும்? எம் கண்ணனைக் கண்டதும்! ஆனந்தக் கண்ணீர் வழிய, அவர்:– ஹே பிரபோ! ஹே விட்டலா! ஹே கண்ணா! இந்த **கடைசி**! வேளையிலும் எம் இருப்பிடம் பரவாயில்லையே! தேடி வந்து விட்டாயே! உனக்கா இருக்குமிடம் தெரியாது? நீ ஏதும் அறியாத பிள்ளை தான். ஆனால் நீ அறியாதது ஒன்றில்லை தான். நீ **மனம்**! உள்ள இடங்களிலெல்லாம் மறைவாய்! ஆனால் **அறிவாய்**! இருப்பவன் நீ. நீ சர்வத்தை அறிந்தாலும், மனித உள்ளங்களுக்கு மட்டும்! சரியாப்புலனாக இருக்கிறாய், என்பதை யாம் அறிவோம்.



ஸத்குருவென்றால்? 98
அங்கு மாயாவும்!
மாயா ஜீவ கவசமும்!
மாயாவின் மகிமை
மணமும்! முறையே
வெயிலின் மஞ்சள் எனவும் தொடரும்.

அவன்:- ஹே மஹாத்மா! உம் மேன்மையும் அறிவோம்! உம் உணர்வையும் அறிவோம்!
சாதனையால்! கிடைத்த தெய்வீக தாகம்!
அனுபவத்தால்! காமம் தாமான நிலை!
உம் சாமர்த்தியம்! இத்தகைமையையும், இவ்வேளையின், பக்குவம் படுத்த வேணுமென்று, பணிவான வேண்டுகோள்?

அவர்:- வேதனைகளின் தொடர்பில், வைத்தவண்ணம்! கண்பார்வை மங்கலில், சூழ்ந்து நோக்கிய வண்ணம் யார் இந்த பக்குவ ஆன்மா? பவகோலம், எமக்கும் இதுக்கும் நெருங்கிய, தொடர்பு உண்டு என்பதைப் போல், தோன்றுகிறதே. யார் கொழுந்தே நீ???

அவன்:- ஹே குருமஹாராஜ்! இந்த ஏழையின் பணிவான, நமஸ்காரங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.
தாய் நிலையில் உங்கள் பேதம்!
அறிவு " " சிஷ்யை!!
ஆன்ம " இரண்டும் ஒன்றே!!!

அவர்:- சபாஷ்! பேஷ்! பேஷ்! உரிய! உரிய! வாக்கு.



சிப்பியில் 99
தோன்றிய
வெள்ளி எனவும்,
கயிற்றில் வந்த
சர்ப்பம் எனவும்,
உணர்வால்
மெய்
மறைந்தே அதக வண்ணம் என்பதே வைத்தியம்.
முடிந்தது.

அவள் :— ஸ்ரீமந்நாமன்! எம் தெய்வமாகும். ஸ்ரீ ஆம் பொருளாகிய தாங்கள், எம் ஸத்குருவாகும். யாம் பிறந்த பிறவிப்பயனை, அடைந்து விட்டோம். தாங்கள் கிருபையால், செய்ய வேண்டியதை, செய்து முடித்து விட்டோம். உனக்காகவே யாம் காத்திருக்கிறோம்.

அவன் :— அம்மா கொழுந்தே! இப்படி பக்குவம் பெற, ஆரம்ப சாதனை, என்ன செய்தாய்?

அவள் :— எம் பெருமான்! கமலக்கண்ணனே! எம்மை தடுத்தாட்கொண்டார். அவர் ஆணையின் படி, சமர்ப்பணமே! முதலில் செய்தோம். அதனால் எம், அஹங்கார, மமகாரம்! நாசமாயின. எங்கும் எதிலும் அவன் இருப்பை உணர்ந்தோம். அவன் பொருள் அவன் செயல் என ஆன பின் நமக்கு இருப்பேது, இயக்கமேது! இவ்வாறு தொடர்ந்தது.



சத்குருவின் வாக்கு :- (100)

சர்வார்ப்பணத்தால் எம் இருப்பு இயக்கம் எம் பொருள்! இம்மூன்றும் நாசமாயின. யாம் இல்லாத நிலையிலே யாமே அவன் ஆனோம்.

அவனை யாம் ஆனோம். இனி அவனையும் அழித்து அது யாமென ஆக வேண்டும் என முடித்தார்.

அவள் :- மனதை உபாதையோ! உடல் சிரமமோ! இல்லாமையாலே, எம் மனம் மிகவும் இலவம் பஞ்சு போல் மென்மையாகி விட்டது. இனி அம்மனதை இல்லாமல் செய்ய மறைத்தாக்க என்ன செய்ய வேண்டுமோ, அதை தாங்கள்தான் செய்ய முடியும். என பணிந்து கனிவாக சொன்னாள்.

அவர் :- அம்மா குழந்தே! உன் மனம் பக்குவம் அடைந்து, உலர்ந்து விட்டது. இனி அது ஞானத்தீயில் பஸ்பமாகிவிடும். அந்த ஞானத்தீ யானது, பிரம்மார்ப்பணம் ஆகும். அதாவது, எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது! என்ற பர உணர்வோடு இருப்பாயாக எனச் சொல்லி அவள் சிரசில் தம் அபயகரம் வைத்து ஆசி வழங்கினார் ஸ்ரீ குருதேவர். அவள் அது நாம் என ஆனாள்.

இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! பாபா.

எல்லாம் ஒன்றே!
அது சிவமே! அது யாமே! அதுவே நீங்கள்! இது சத்தியம்.



(A)

# உ வசைபாட வாசகங்கள்!

## சகுனியின் நிந்தாஸ் துதி!!

(1) ஹே கமல நயனா! நீ பொல்லாதவன்! வாக்கு சுத்தம் இல்லாதவன்! கருணையே இல்லாதவன்!

(2) உன் பிரிய மாதா! ஸ்ரீ யசோதாவை! கொடுமைப்படுத்தினான் என்பதற்காக உன் தாய்மாமனையே! (கம்சனை) கொன்றவன் நீ!

(3) நீ ஓர் பக்கா கிருடன்! கோபியரின் வெண்ணையை! திருடி உண்டாய். அதனால் கோபியரிடம் அடி உதை வாங்கினாய். உன் தாய்! யசோதா! உன்னை துசிட பின்னொரு நாள் உரலில் பிடித்து கட்டி வைத்தாள். இன்று உன்னை கட்ட ஆள் இல்லை.

(4) பாரதப் போரில், என்னதான் தத்துவ உபதேசம் செய்தாலும், உன் நடத்தையில் வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்யே! நிறைந்த காரணத்தினாலே நீயா தர்மத்தை காப்பவன்?



(3) பறவை என தாழ்வாக கருத வேண்டாம். குரங்கு என தாழ்வாக கருத வேண்டாம். தந்தையவன் **பெரிய** திருவடி ஆகும். மைந்தையவன் **சிறிய** திருவடியாகும். தொடரும்

(5) வாழ்க்கையில், வசதியில் வாழ்தவன் **வாழ** தெரியாதவன். ஆகவே, துர்நாற்றம் உள்ள, **சர்ப்பத்தை** படுக்கையாக கொள்வாயா?

(6) தேவர்களிலும் நீ **இழி**வானவன். ஏன் என்றால்? தேவர்களுக்கு புஷ்பக விமானம் இருக்க, ஓர் இழிந்த **பறவையை** (கருடன்) வாகனமாக, கொள்வாயோ?

(7) **33 கோடி** தேவ கன்னிகள் இருக்க, தாசிகளும் கேவலம் **பெண்ணாரங்கள்** துணையாக கொண்டவனல்லவா? ஆகவே நீ அற்பமானவன்.

(8) நீ ஒர வஞ்சனைக்காரன். இல்லாமல் இருந்தால், பஞ்சபாண்டவர்கள் **ஐவரை** காத்த நீ அவர்கள் வம்சமாண்டாகிய (பரீக்ஷித் ஒருவனை தவிர)



இ ஒருவன் பறந்து செல்பவனாகும். (8)
ஒருவன் தாவிச் செல்பவனாகும். ஆனால்
அவ்விருவருமே தன் பலத்தை நம்பாமல்,
திருவடியையே நாடிச் செல்வதால் திருவடியையே நம்பியிருக்கிறார்கள்.

முடிந்து அனைவரையும், நீ மோசமாக! கெடுத்தவன் அல்லவா நீ?

(9) கொண்ட மனைவி ஜானகியையே! ஓர் பதிவிரதையையே சந்தேகம் கொண்ட நீ!
எம்மையும் சோதிக்கிறாயும்! எப்படி காப்பாற்ற முடியும்?

(10) பக்தர்களுக்கு சோதனையை கொடுப்பதே! உன் சாதனையாகும்!
இதைவிட வேறு என்ன செய்து விட முடியும் உன்னால்?
சோதித்து! சோதித்து! என்ன பலன் கண்டாய்?
என கத்தி கதறி அழுது முறையிட்டு ஓர் நிந்தனை செய்தான்.
ஏசிக்கொ பின் அவன் கருணையால், நிந்தனை தெளிந்தான்.
தம் தவறை! எண்ணி எண்ணி துக்கிக்கிறான்.
எப்படி என்றால்?
ஹே கருணைக் கடலே! கிருபா சமுத்திரமே! தீனதயாளா! தீனபந்தோ! தீன ரக்ஷகா! ஆபத்பாந்தவா! அனாத ரக்ஷகா! பக்த ரக்ஷகா! பதிதபாவனா! பரந்தாமா! பரமாத்மா! பாவனநாமா! பரமதயாளா! ஹரே! ஹரே!
என உருகி சொல்கிறான்.




உ

6 அறிவுள்ள மனித இனம் மனதின் அடிமை ஆன தன்மையால் சுயவசம் இழந்தனம்! சங்கேதக்காரன்!
எம்மை முழுமையாக நம்ப முடியவில்லை.

கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவன் நீ!
உருகும் மனக்குறையை தீர்ப்பவன் நீ!!
அறிவுக் கண்ணுக்கு தெரிபவன் நீ!!
அறிவுக் கண்களை திறப்பவன் நீ!!
எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! எதிலும் இருப்பவன் நீ!!
எம் அறியாமையை! மன்னித்தருள்வாய்!
கருணை கடலே! காருண்ய வடிவே! ஹே இதயவாசி!
எனை அவமானக் குளத்தில் ஜலம் எடுக்க வந்தவனே!
புலம்பி தீர்த்து விட்டு பின்னர் 40 வருடங்களில்
அவனை கண்டபின் சூரிய நிலையில் அவன் நாமமதை! உருகி அவனி கதறி மெய் சிலிர்த்து! உடல் வேர்த்து! நிலை தடுமாறி ஐயத்தில் விழுந்தவனை, அபயகரம் தந்து! ஆதரித்தான்
எம்பிரான் அந்நிலையில், எம் தாயன்! இறைவன்! கண்ணன்!
இந்த பதிவு பின்னர் காண்க. சக்குவை தாக்கிய

## சக்குவின் நிந்தாஸ்துதி



எம் பிரபு! அந்த ஆனந்த சக்குவை! சமாதானம்
பக்தியை மிஞ்சும் குழந்தாய் சக்கு! உன் அருட்புலம்
பத்தையும், தெரிவு படுத்திடுவோம். கவனமாக கேள்!

(1) ஹே கமலநயனா! நீ பொல்லாதவன்! வாக்குசுத்தம்
இல்லாதவன்! கருணையே இல்லாதவன்!

பதில் — **நோய்** குணம் கொண்டு, எம்மை
நோக்கினால், யாம் பொல்லாதவனே!
**வினை/மனம்!** வசம், சிக்கியவர்களுக்கு,
அனுபவம் இல்லாத தன்மையால், எம் வாக்கு/ தெளிவை
தராது. (குழப்பமே தரும்)
அஹங்காரா! மமகாரா! **தற்புகழ்!** இருக்கும்
போது, எம் கருணை பிரவாகத்தை மறைத்துவிடும்.
அன்று எம், கருணையை காண முடியாது.

(2) தாய் மாமனையே கொன்றவன் நீ.

பதில் — யாம் சாட்சியானவனே! (எமக்கு மனம் இல்லை)
ஆகவே அங்கு உறவு/ சுற்றம்/ நட்பு/ தோன்ற முடியாது!
தோன்ற இயலாது.

மேலும், ஸ்ரீ மாதா ஸ்ரீ பாதா! கண் கண்ட தெய்வம் என,
நிரூபணம்/பண்ண வந்ததே எம் அவதாரம் ஆகும்.



5 அறிவுள்ள (F)

குரங்கு இனம்! **மனம்**

இவ்வினங்கள் மையிலே

எம்மை முழுமையாக

நம்புகின்றன. அதற்கு

**உ**

**சேவையும்** செய்கின்றன. ஆகவே குரங்கை நம்பிக்கையாக கொண்டோம்.

(3) நீ ஒரு பக்தன் கிருஷ்ணா! கோபியரின் வெண்ணெயை! திருடி உண்டாய். அதனால் கோபியரிடம் அடி உதையும் வாங்கினாய். உன் அன்பிய தோழர்களுக்கு! உன்னை திருடன் என்றுதான் ஊரில் பிரசித்தம்.

பசுவின் பால் என்பது **பக்தி**! அதில் விளையும் **ஞான** வைராக்கியமே தயிர்! அதன் உள்ளே **மன** பொருளாய் இருப்பது **ஞானம்**! என்னும் **வெண்ணெய்** ஆகும். அவ் வெண்ணெயையே யாம் திருடுவோம். காரணம், வெண்ணெயை மோரிலோ! நீரிலோ! போட்டால்தான் கெடாது. அதை காவாகாலத்தில் உருக்கி **நெய்** ஆக்குவதே **வைராக்கியம்**! நெய் ஆக்கவில்லையானால் வெண்ணெய் கெட்டுவிடும். ஆகும் - வெண்ணெய் ஆக வேண்டியது பக்குவ ஆன்மாவின் கடமை! அவ் வெண்ணெயை அவர்கள் **மனம்** அறியாவண்ணம்! **திருடி** களவு செய்து அதை நெய் ஆக்கி, அவர்களை கரை சேர்ப்பதே **எம்** கடமையாகும். இதை திருடல் என பேசி வருகிறது.



அப்பூவையும் (கருடனும்) ஏ அக்ரூரனும் (ஹனுமனும்) அறிவுடன் சூடிய எம் திருவடியை தாங்கிய நிலையில் எம் திருவடியையே நம்பியிருக்கிறார்கள்.

அப்பிருவரும்! திருவடி சேவை செய்பவர்களாகும்.


யாம் இருட்டில் இல்லையானால், அவர்கள் ஞானானுபவம் பெறுவது எப்படி? அந்த பொய் யானைதான்! இன்னும் நிலைத்து நிற்கிறது, திருட்டுப்பட்டம்.

அதன் மெய் மறை! பொருளாயிருக்கிறது.

பக்குவ ஆன்மாக்களின், உள்ளங்களை திருடுவோம். அந்த திருட்டுப்பட்டமே, எமக்கே பொருந்தும்.


(+) பாரதப் போரில்! என்னதான் கீதோபதேசம் செய்தாலும், உன் நடத்தையில் வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்யே! நிறைந்து காணப்படுகிறது. நீயா தர்மத்தை காப்பவன்?

பதில்:— இச்சீவர்களிடம் எங்கெங்கே! எப்போதெப்போதெல்லாம், மேலே சொன்ன, கவி தோஷ கோர குணங்கள் காணப்படுகிறதோ, அங்கங்கெல்லாம்! அப்போதைக்கப்போது! அக்குணங்களையும்! எம்மிடம் யாமே! தோற்றுவித்துக் கொண்டு, முள்ளை முள்ளால் எடுப்பது போல, அக்குணத்தையும்! அக்குணத்தை கெடுக்க இக்குணத்தையும்! சேர்த்து தார எரிந்து விடுவோம். ஆனால் எம்மிடம் ஒரு குணம்! ஒன்றே நிலைபெறும். மற்றும் எக்குணமும் நில்லாதது.



(5) வாழத் தெரியாதவன், ஆகவே துர்நாற்றமுள்ள
சர்ப்பத்தை, படுக்கையாக கொண்டவன் யாரோ நீ?
பதில்:— ஓர் நிலையால், எம் **யோக** வலுத்தால்,
எம் **குண்டலினி**யையே, எமக்கு ஆதார
மான படுக்கை ஆக்கிக் கொண்டோம். **ஒன்று**
மந்திரத்திலையில், விஷமும் அமிர்தமும்
என்ற அபேதநிலையில் **நிறை** சர்ப்பத்தை, எம் படுக்
கையாகவும், நண்பனாகவும், ஆக்கிக் கொண்டோம்.
(6) தேவர்களின், பூஜ்ய விமானம் இருக்க, இருந்து
(7) பறவையை, வாகனமாக கொண்டவனே யாரோ நீ?
பதில்:— நடப்பன வற்றில், வானரத்தையும் (ஹனுமானையும்)
பறப்பன வற்றில் கருடனையும், நீந்துவன வற்றில் எம்
மச்சாவதாரமும், ஊர்வன வற்றில் சர்ப்பத்தையும்
மனித இனத்தில், பக்தி ஆன்மாக்களையும் **ஆதார**
**மாக** கொண்டு, எவ்வாம் **யாமே** யாமே எவ்வாம்
என்ற பரிபூரண உணர்வை கொடுக்கிறேன்.

## சக்குவின் நிந்தாஸ்துதி



1

8 நீ ஒரு வஞ்சகக்காரன்! எப்படி என்றால்? பாண்டவர்கள் ஐவரைக் காத்தாய்! அவர்கள் வம்ச தூண்டையே, கருவறுத்தவன் நீ?

பதில்:— இக்கலியுகமும் அவதாரமே, துஷ்டநிக்ரஹம்! சிஷ்டபரிபாலனம்! ஆகும். இதில் பாரபக்ஷ தோஷம் இல்லாமல், அவரவர் ஏற்றுவந்த வினைவிதியின்படி! அவரவர் வந்த காரியம் முடிந்து, அவரவர் எங்கெங்கு செல்லவேண்டுமோ, (அழைப்பினைத் தேர்ந்து) அங்கங்கு சென்றுவிட்டார்கள். அதுமட்டும் இல்லை. அதுவிதியும் மாயாவும்! இணைந்து விளையாடிய ஓர் விளையாட்டாகும். அதை மனம்படைத்தோர் மரணம் என்று பிதற்றி திரிகின்றனர்.

9 கொண்டமனைவி! ஜானகியையே, சந்தேகம் கொண்டவன் நீ? ஆகவே உன்பக்தர்களையும்! எம்மையும்! எப்படி காப்பாற்றப் போகிறாய்?




9 ராமாயணம் என்றால் ராம + அயணம் = ராமாயணம்! ஆகும். ராம அயணம் என்றால் ராமன் வாழ்ந்து காட்டிய பாதை! என்று பொருள்படும். ஆகவே அது ஸத்திய தர்மத்தோடு! கூடியதாகும்.

பதில் :- எம் ஸ்ரீ ராமாவதாரமே! ஸத்திய தர்மத்தோடு! இணைந்த காலம். பிறர் குற்றம் குறைகளை! நம் குற்றம் குறையாக, ஒத்துக் கொண்டோம். அதுதான் எம் அவதாரத்தின், பண்பும் பயனும் ஆகும்.

10 சோதனையை கொடுப்பதே! உன் சாதனையாகும்! இதை விட வேறு என்ன செய்து விட முடியும் உன்னால்? சோதித்து! சோதித்து! என்ன பலன் கண்டாய்?


பதில் :- இதில் ஓர் முக்கியத்தை உணர வேண்டும்? ஓர் நிலையில் நீ ஓர் ஆவரணமே! (பொன்னான எம்மானவான) நீங்கள் அனைவரும், பொன்னவான, ஆவரணங்களே! நீ பொன்னாக இருக்கும் போது, நீயும்! யாவும்! ஒன்றே தேவைக்கு ஆசையின் பெருகும் போது,

## சக்குவின் நிந்தாஸ்துதி



எம் மாயா & மனம்! இனியும் போது, அவைகள்
களிம்பு & தாமிரமும்! உன்னோடு இணைந்த தன்மை
யினால் **நாமரூப ஆவரணம்** என!
ஆகி விட்டாய். அதன் பலனை, எம்மை பொன்னின்
மறந்தாய். ஆவரண நாம ரூப மயக்கத்தில்,
விழுந்துவிட்டாய். இப்போது, உன் வினை & மனம்!
அறிந்தோம். ஆகவே, உன்னை பொன்னாக்க முடிவு
செய்தோம்.
களிம்பு & தாமிரமே! உன்னை விட்டு நாசமாணவர்கள்
நீ பொன்னை யாமாக முடியும். ஆகவே தான் உன்னை
**புடம்** போட்டு, பொன்னாக்கி விட்டோம்.

குறிப்பு:— நவமணிகளையும், வெள்ளி,
தாமிரம், பித்தளை, அலுமினியம், போன்ற எந்த
பொருளும், புடம் போட முடியாது. புடம் போட
தேவை இல்லை. பொன்னிற்குதான் புடம் போட முடியும்.



இப்போது சொல்லுகின்றாய்! **பக்தா!**
யாம் உடம் போவதை, சோதனை & வேதனை என்று
தவித்துக் கொண்டிருந்தாயே! யாம் செய்தது,
**சரியா? தவறா?**
பக்தா! கடகடகடவென சிரித்து விட்டான்.
நல்ல **கதை!** சொன்னாய், எப்போ மாயவா?
உன் காரியம் அனைத்துமே **கருணையின்!**
நிலையில், வெகு அமைதியின் ஆனந்தமே. இதை
**மனக்கண்!** கொண்டு நோக்கினால் அனுபவங்களை,
**அறிவுக்கண்!** கொண்டு உணர்ந்தால்
பேரானந்தமே. இங்கு உன் கருணைக்கு ஈடு இணை
எதுவுமில்லை ஐயனே என பக்தன் அழுதான்.
அவன் மெய் மறந்தான். எல்லாம் நீயே!
எல்லாம் உன்னால்!

கண்ணன்
**பாபா.**

எல்லாம் உனதே! இவை சத்தியமானவை
எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது ராமமே! ராமமே அது! இது சத்தியம்



உ

# ஓர் சிறிய விளக்கம்.

அன்பான குழந்தைகளே, உங்கள், இல்வாத

இல்லற வாழ்க்கைப்பாதையில்,

மனம், என்றால், ஒரு நாமரூபம், எண்ணம்.

புத்தி, என்றால், அந்த ஒரு நாமரூபத்தை ரகரகமாக பிரித்து காண்பது.

சித்தம், என்றால், அப்படி பிரிந்த நாமரூபங்களை, வசீகரம், கவர்ச்சி, ஆடம்பரம், அணிகலன், அழகு, சுவை, நிறம்கரம், ஆகிய நாமரூபங்களாக) இணை, மனை, தோழமை சம்பந்தப்படுத்தி, அறிவது ஆகும்.

**மனம், புத்தி, சித்தமாக**

காணாமல், ஆரம்ப நிலையிலேயே, நீங்கள் உணர வேண்டியதாவது? **மனம், அறிவு** (சாட்சி)

**பேரறிவு** (சர்வசாட்சி) யாக, உணரலாம்.

(இங்கு காண முடியாது. உணரத்தான் முடியும்)



இதில் கூறிய ஒவ்வொரு பாடமும் (7) கடினம் அல்ல ஓர் சிறியமாற்றமே.

வடதுருவம்! தென்துருவம்! போல் ஆகும். நேர் எதிரிடையாக போனால் போதும் அவ்வமாக முடியும். இது சீவாத்மமனமும் பரமாத்மமனமே இருப்பாக செய்யும்.

மனம்! என்றால், ஒரு நாமரூப எண்ணம்.

அறிவு! என்றால், அது ஸ்ரீ பகவான் திருவடியே.

அது ஸ்ரீ பகவான் பொருளே! அது ஸ்ரீ பகவான் இயக்கமே.

பேரறிவு! என்றால், எல்லாம் மண்ணே! மண்ணாகிய

பரமே! பரமாகிய நாமமே! நமக்கு அன்னியமாய்,

எந்த நாமரூபங்களும் இல்லை மண்ணுக்கு அன்னியமாய்

எந்த நாமரூபங்களும் இல்லை. என உணர்வதே பேரறிவு.

என, மேலே கூறியபடி, உணர்ந்தால் அங்கு காட்சி இல்லை. காண முடியாது. கரணங்களின் நான்காவது அம்சமான

# அகங்காரம்!

ஆதிக்கம், அதிகாரம், அபிமானத்தோடு நிர்மூலமாகி அழிந்து நாசமாகும். இது சத்தியம்.

பரமம்


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!